මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: FP/06/100/05/01/2016
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015.12. 31

**அரசிறை கொள்கை சுற்றறிக்கை இல: 01/2010(i)**

ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், சுங்கத் திணைக்களம்

**வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் 2016 இனை செயற்படுத்துதல்**
**தேச கட்டுமான வரி (தே.க.வ) வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றல்**

2010/12/29ஆம் திகதிய அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2010 இன் நியதிகளின் படி, 2% இல் திரட்டப்பட்ட தேச கட்டுமான வரி வருமானத்தின் 1/3 பகுதி மாகாண சபைகளுக்கு மாற்றப்படுகின்றன.

2. எவ்வாறாயினும், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய, தே.க.வ. விகிதம் 2% இலிருந்து 4% இற்கு அதிகரிப்பதற்கும், அதிகரிக்கப்பட்ட தே.க.வ. விகிதத்திலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானத்தினை திரட்டு நிதியில் வரவு வைப்பதற்கும் முன்மொழியப்பட்டது.

3. இதன் பிரகாரம், 2016/01/01 முதல் பயன்வலுப் பெறத்தக்க வகையில் 4% இல் திரட்டப்படுகின்ற தே.க.வ வருமானத்தின் 1/6 பகுதிக்கு சமனான தொகையினை மாகாண சபைகளுக்கு மாற்றுவதற்கு இத்தால் நீங்கள் அதிகாரமளிக்கப்படுகின்றீர்கள். மேலும், சுற்றறிக்கை 01/2010 இன் பந்தி 2 (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அதே விகித அளவில் குறித்த மாகாண சபைகளுக்கான தே.க.வ. வருமான மாற்றல்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

4. சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட ஏனைய சட்டத்திட்டங்கள் மாற்றமின்றி பயன்வலுப் பெறும்.

ஆர்.எச்.எஸ். சமரதுங்க
பொது திறைசேரி செயலாளர்

பிரதிகள் :
1. கணக்காய்வாளர் நாயகம்
2. செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
3. மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
4. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
5. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
6. பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்
7 செயலாளர், நிதி ஆணைக்குழு
8. பொது முகாமையாளர், இலங்கை வங்கி
9. பொது முகாமையாளர், மக்கள் வங்கி